RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt224s22274

# காரைக்கால் பேயின் பக்தி நெறி

கி. புவனேஸ்வரி [அ, *]

[அ] முதுகலைத் தமிழியல் மற்றும் உயராய்வுத் துறை, செல்லம்மாள் மகளிர் கல்லூரி கிண்டி சென்னை-600032, தமிழ்நாடு, இந்தியா

# Karaikkalammaiyar's Devotional Code

**K. Bhuvaneswari** [a, *]

[a] Department of Tamil, Chellammal Women's College, Guindy, Chennai-600032, Tamil Nadu, India

* Corresponding Author: bhuvaneshwari8@gmail.com

Received: 26-09-2022
Revised: 11-11-2022
Accepted: 16-11-2022
Published: 05-12-2022

Check for updates

**ABSTRACT**

The literature that appeared in each period is a reflection of the society of that time. According to the social environment, their songs are special. In this way, these literatures are called by the name of the period in which they appeared as Sanga period literature, Ara Ilakkiyam, Kappiya literature, Bhakthi literature, Sittrilakkiyam contemporary literature. The Bhakti period was from the 6th to the 9th century AD. But before that time it was Karaikal Ammaiyar who created many devotional literatures in the worship of Shiva and was the pioneer of all the servants. He has given works such as Thiruvirattai Manimalai, Arputha Thiruvanthadhi, and Thiruvalangattu Muththa Thirupathikam. Each pattern is followed in all three works. The purpose of this article is to explore his movement with such works. Karaikalammaiyar's songs reveal his life, society, the parables she follows, and the mythological messages she tries to convey. The patterns she dealt with in his works later evolved into Prabandhas. The development of such literature is also explored. The difference between his Bhakti Norma and the Bhakti Norma of other servants is examined. In this study descriptive, analytical and comparative research approaches are followed.

**Keywords:** Karaikal Ammaiyar, Bhakthi literature, Kappiya literature, Worship

## முன்னுரை

பக்தி இலக்கியம் என்பது மூன்று நூற்றாண்டுகளைத் தனக்குள்ளே கொண்ட இலக்கிய காலகட்டம் ஆகும். இத்தகைய இலக்கியத்தைக் குறித்து பெரும்பான்மையான ஆய்வுகள் வெளிவந்துள்ளன. பக்தி இலக்கியத்தில் சமுதாயப் பார்வை, பக்தி இலக்கியத்தில் அறிவியல், திருமுறைகளில் இறைமாண்பு போன்ற பொதுப்படையான ஆய்வுகள் நிகழ்ந்துள்ளன. அதேபோல் அதிக பாடல்களைப் பாடிய திருஞானசம்பந்தர் ஓர் ஆய்வு, திருஞானசம்பந்தரின் கடைக்காப்பு செல்நெறி, திருநாவுக்கரசர் போன்றோரைப் பற்றி ஆய்வுகளும் பொதுப்படையாக நிகழ்ந்துள்ளன. குறுகிய பாடல்கள் பாடிய அடியார்களைப் பற்றி வரக்கூடிய ஆய்வுகள் மிகச் சிலவே. அதிலும் காரைக்காலம்மையாரைப் பற்றி ஆய்வுகள் சில நூல்களாகவும், பல கட்டுரைகளாகவும் வெளிவந்துள்ளன. காரைக்காலம்மையார் தமிழ் பக்தி நெறி மறுமலர்ச்சியின் முன்னோடி, காரைக்கால் அம்மையார் வரலாறு, காரைக்கால் அம்மையார் வாழ்வும் வாக்கும் போன்றவை அவற்றில் சில. இத்தகைய ஆய்வுகள் மத்தியில் இவ்வாய்வானது அவரின் பாடல்களைக் கொண்டு அவரின் செல்நெறியை அறிவதிலிருந்து வேறுபடுகிறது. பக்தியை மட்டும் பிரதிபலிக்காமல் தான் வாழ்ந்த

சமூகத்தையும் அக்காலச் சூழலையும் தன் பாடல்களின் வழியே வெளிப்படுத்துகிறார் என்பது இவ்வாய்வில் இருந்து பெறப்படுகிறது. மேலும் அவர் பயன்படுத்திய வடிவ முறையானது எங்கிருந்து தோற்றம் பெற்று பிற்காலத்தில் எவ்வாறு வளர்கிறது என்பதும் ஆராயப்படுகிறது.

## காரைக்காலம்மையார் இலக்கியங்களின் தனிச்சிறப்பு

காலம் கடந்த நிற்கக்கூடிய இலக்கியங்கள் அனைத்தும் சிறப்பு வாய்ந்தவையே. 1500 ஆண்டுகளுக்கு மேலாகியும் காரைக்காலம்மையாரின் இலக்கியங்கள் காலந்தோறும் போற்றப்படும் இலக்கியமாக வலம் வருகிறது. அத்தகைய நிலைக்கு காரணம் அவரது இலக்கியங்களில் காணப்படும் தனிச்சிறப்பாகும். பாடல்களில் பயன்படுத்தப்படும் இசை, பாடல்களின் வடிவம், பாடல்களில் பயன்படுத்தப்படும் அணிகள், பாடலின் கருப்பொருள் போன்ற அனைத்தும் தனிச்சிறப்பு வாய்ந்தவை. இசை, நாட்டியம், யாப்பு, புதுமை, வேட்டல், ஆன்மீகத் தெளிவு ஆகியவற்றை நோக்கும்போது காரைக்கால் அம்மையார் ஒரு சாதாரண பெண்ணாகவோ இறை அடியாராகவோ மட்டும் இருக்க வாய்ப்பில்லை. கலை ஞானங்கள் அனைத்தையும் முறையே பெற்றவர் என்பது நன்கு புலனாகிறது.

அக்காலகட்டத்தில் எழுதப்பட்ட காப்பியங்கள், நீதி நூல்கள், வெண்பா இவற்றைத் தவிர்த்து புதுவகையான பாவகைகளையும் இலக்கிய வகைகளையும் பாடியுள்ளமை நோக்கும்போது சமணத்திற்கும் பௌத்தத்திற்கும் எதிரான மனநிலையுடன் அவ்விலக்கியங்களின் வடிவத்தினை தவிர்த்து உள்ளார் என்பதை அறிய முடிகிறது. அந்தாதி, மாலை, பதிகம், போன்ற சிற்றிலக்கிய வகைகள் இவற்றில் இருந்தே தொடங்குகிறது எனலாம். முதன்முதலில் கட்டளை கலித்துறை என்ற யாப்பினை இவரேப் பாடுகின்றார். தொல்காப்பியர் குறிப்பிடாத பாவகை இது. அம்மையாருக்கு பின் வந்த திருநாவுக்கரசர் இந்த யாப்பைப் பயன்படுத்தியுள்ளார். ஆனால் அவர் காலத்தில் இதனை திருவிருத்தம் என அழைத்துள்ளனர். திருக்கோவையார் முழுமையும் கட்டளை கலித்துறை யாப்பினால் மாணிக்கவாசகர் பாடியுள்ளார்.

## வடிவம்

காரைக்காலம்மையார் தான் இயற்றிய ஒவ்வொரு நூல்களுக்கும் ஒவ்வொரு வடிவ முறையினை பின்பற்றுகிறார். அந்தாதி என்பது ஒரு பாடலின் இறுதி சொல் அல்லது தொடர், தொடர்ந்து வரும் அடுத்த பாடலின் தொடக்கமாக (ஆதியாக) வருவது. அந்தாதி குறித்து தொல்காப்பியர் இலக்கணம் உரைக்கவில்லை. ஆயினும் சங்க இலக்கியம் ஐங்குறுநூற்றில் தொண்டிப் பத்தும் பதிற்றுப்பத்தில் நான்காம் பத்தும் அடிசீர் அந்தாதியாக பாடப்பட்டுள்ளது. வெண்பா அல்லது கட்டளை கலித்துறை பாக்களால் அந்தாதி அமையும். காரைக்கால் அம்மையாரால் இயற்றப்பட்ட அற்புதத் திருவந்தாதி தொடையால் அமைந்த முதல் நூலாகும்.

“அவர்க்கே எழுபிறப்பும்
ஆளாவோம் என்றும்
அவர்க்கேநாம் அன்பாவ
தல்லாற் -பவர்ச்சடைமேற்
பாகாப்போழ் சூடு
மவர்க் கல்லான் மற்றொருவர்க்
காகாப்போம் எஞ்ஞான்றும் ஆள்.” (Kalyanasundaram, 1994)

“ஆளானோம் அல்லல்
அறிய முறையிட்டாற்
கேளாத தென்கொலோ

கேளாமை - நீளாகஞ்" (Kalyanasundaram, 1994)

இந்தப் பாடல்கள் திருவந்தாதி இலக்கியத்திற்கு சான்றாக அமைகிறது. ஒவ்வொரு இலக்கியத்திலேயும் புதுமையினை தேடும் விருப்பம் உடையவராக அம்மையார் இருப்பது இதன் மூலம் புலனாகிறது.

## மாலை

இரு வேறுபட்ட யாப்பு வடிவங்களால் ஒரு பொருள் குறித்த இருபது பாடல்கள் பாடப்படும் இலக்கிய வகை இரட்டை மணிமாலை ஆகும். இவர் இயற்றிய திருவிரட்டை மணிமாலையில் உள்ள பாடல்கள் கட்டளை கலித்துறை, வெண்பா ஆகிய யாப்புக்களால் பாடப்பட்டுள்ளது. ஆனால் பன்னிரு பாட்டியல் இரட்டை மணிமாலையின் இலக்கணத்தை கூறும்போது,

"வெண்பா முதலாகக் கலித்துறை பின்வரும்

இந்த இருபதிரட்டை மணிமாலை"

என்ற நவில்கிறது. இதிலும் அம்மையார் ஒரு புதிய நோக்கோடு கலித்துறையை முதலாகவும் வெண்பாவை அடுத்தும் அமைத்துள்ளார்.

## பதிகம்

பக்தி இலக்கியத்தில் பதிகம் என்ற அமைப்பிற்கு காரைக்கால் அம்மையாரே முன்னோடி. பத்து பத்து பாடல்களாகப் பாடும் அமைப்பிற்கு பதிகம் என்ற பெயர். அதனால் தான் இவருடைய பாடல் மூத்த திருப்பதிகம் என்று அழைக்கப்படுகிறது. இவரைப் பின்பற்றிய தேவார மூவரும், மாணிக்கவாசகரும், ஆழ்வார்களும் பதிக அமைப்பில் பாடல்களை இயற்றியுள்ளனர். இவருக்கு முன்னமே பதிக அமைப்பு பதிற்றுப்பத்து, ஐங்குறுநூறு, திருக்குறள் போன்ற நூல்களில் பாடப்பட்டு இருந்தாலும் இவருக்கு பின் பக்தி இலக்கியங்களின் வகையாக பதிகம் மாறியது எனலாம். மூத்த திருப்பதிகம் எண்சீர் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம், இரண்டாம் பதிகம் அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தமாகும். இளங்கோவடிகளுக்கு பிறகு விருத்தப்பாவினைத் தம் நூலில் முழுமையாக பயன்படுத்தியவர் இவரே.

பதிக வரலாற்றினை கூறும் வழக்கமும் இவரிலிருந்தே தொடங்குகிறது. (பாடியவர் பாடலைப் பாடியதற்கான அத்தாட்சி) பதிகப் பயன் என்றும் இதனை கூறுவர். எத்தலத்தில் பாடப்பட்டது என்ற வரலாறும் இதன் மூலம் அறியலாம்.

"காரைக்கால் பேய்

செப்பிய செந்தமிழ் பத்தும் வல்லார்

சிவகதி சேர்ந்தின்பம் எய்துவாரே" (Kalyanasundaram, 1994)

தான் பயன்படுத்திய ஒவ்வொரு வடிவத்திலும் புதுமையான ஒன்றைப் பயன்படுத்தி சிவபெருமானின் அருளைப் பாடியதோடு தன் திறமையையும் ஒருங்கேப் புலப்படுத்துகிறார் காரைக்காலம்மையார்.

## இசையும் பண்ணும்

நாயன்மார்களில் மூவர் பெண்கள். காரைக்காலம்மையார் முதன்முதலில் பண்ணொடு பாடி இறைவனைப் போற்றிய முதல் பெண் நாயனார். மூத்த திருப்பதிகம் நட்டப்பாடைப் பண்ணில் பாடப்பட்டுள்ளது. இரண்டாம் பதிகம் இந்தளம் என்னும் பண்ணில் பாடப்பட்டுள்ளது. இத்தகைப் பண்களை இவருக்கு பின் வந்த திருநாவுக்கரசரும் திருஞானசம்பந்தரும் பின்பற்றியுள்ளனர்.

திருஞானசம்பந்தர் பாடிய முதல் பதிகமான தோடுடைய செவியன் நட்டப்பாடை பண்ணில் பாடியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. இந்தளப்பண்ணை தாய் இராகம் என்றழைக்கின்றனர். சுந்தரர் தன்னுடைய முதல் பதிகமான பித்தா பிறைசூடி என்ற பதிகத்தை இந்தளப் பண்ணில் பாடியுள்ளார். திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசர் ஆகியோர் நிகழ்த்திய அருஞ்செயல்களில் ஒன்றாகிய உயிர் எழுப்பும் போதும் இந்தளப் பண்ணில் தான் பாடியுள்ளனர்.

“மட்டிட்ட புன்னையங்

கானல் மடமயிலைக்

கட்டிட்டங் கொண்டான்”

என்ற பதிகமும்

சடையா யெனுமால்

சரண்நீ யெனுமால்

விடையா யெனுமால்

என்ற பதிகமும் திருஞானசம்பந்தரால் பாடப்பட்டவை ஆகும். இதேபோல் ‘ஒன்று கொலாம்' என்ற பதிகம் திருநாவுக்கரசரால் பாடப்பட்டது.

பின்வந்த இசைவாணர்கள் இவ்விரு பண்களுக்கு முதன்மை அளித்தமையை அறிய முடிகிறது. இவற்றிலிருந்து காரைக்கால் அம்மையாரின் இசையறிவும், பிற்காலத்தோருக்கும் வழிகாட்டியாகவும் விளங்கினார். ஆனால் இவருடைய வரலாறு மாம்பழத்திலும் பேய் உருவம் பெற்றதிலும் மட்டுமே முதன்மைப்படுத்திக் கூறப்படுகிறது. இவரின் முழுமையான வரலாறு அறிய முடியவில்லை என்பதே உண்மை.

## பேயைச் சிறப்பித்த பேயார்

முதன் முதலில் பேய்களைக் குறித்து சிறப்பித்து பாடியவரும் இவரே. பேயைக் கண்டவர்கள் யாரும் இல்லை. ஆனால் இவரின் பாடல்கள் பேயினை நம் கண் முன்னே ஓவியமாக காட்டும்.

“கொங்கை திரங்கி நரம்பெழுந்து

குண்டுகண் வெண்பற் குழிவயிற்றுப்

பங்கி சிவந்திரு பற்கள்நீண்டு பரடுயர்

நீள்கணைக் காலோர்பெண்பேய்” (Kalyanasundaram, 1994)

என பேயின் மார்பு, கண், பல், வயிறு, கால் போன்றவற்றை எடுத்துக்காட்டுகின்றார். மேலும் தன்னுடைய பாடல்களில் பெண் பேய், பிள்ளை பேய், தாய் பேய், சுழலும் அழல் விழக் கொள்ள வாய் பேய், பட்டடி நெட்டு கீர்ப் பாறு காற் பேய், செடிதலைக் காரைக்கால் பேய் (தன்னை), பறை போல் விழிக்கட் பேய், நெடுபற் குழிகண் பேய், அழல் வாய் அழல்கட் பேய், சிறுபேய், மயானத் தெரிவாய் எயிற்றுப் பேய், கணல்வாய் எயிற்றுக் காரைக்கால் பேய் (தன்னை) என பல்வேறு பேய்களை குறிப்பிடுகிறார்.

இவரைத் தொடர்ந்து பரணி இலக்கியத்தில் பேய்களை நாம் காண முடிகிறது. இவருடைய திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகத்தில் சுடுகாட்டை குறித்தும் அங்குள்ள விலங்குகள், பறவைகள், தாவரங்கள் குறித்தும் கூறியுள்ளார்.

குறுநரி, கூகை, பருந்து, ஆந்தை, ஊமன், கடுவன், கழுகு போன்ற விலங்குகள் மற்றும் பறவைகள் குறித்து தன்னுடையப் பாடல்களில் கூறியுள்ளார். வாகை, சுள்ளி, எட்டி, இலவம், ஈகை, சூரை, காரை, முள்மரம், விளாமரம், மூங்கில், தாளிப்பனை, இண்டு கொடி போன்ற தாவர இனங்கள் சுடுகாட்டில் வளரும் தாவரங்களாக அம்மையார் குறிப்பிடுகிறார்.

சுடுகாட்டை பல்வேறு பெயர்களில் சிறப்பித்து வருவதும் இவரே. பேய் தங்கி அலறி உலருக் காடு, ஈமம் சுடு சுடுகாடு, ஈடுகாட்டு அரங்கம், அழுதுறங்கும் புறங்காடு, குறுநரி சென்றணங்கு காடு, பட்ட பிணங்கள் பரந்த காடு, அரங்கு காடு, இறைவன் பெயரும் பெருங்காடு, கடுவெங்காடு, முதுகாடு, சிறீபேய் சிரமப்படு காடு, இருள் சூழ் மயானம் என சுடுகாடு குறித்த இவரின் சொல்லாட்சி நோக்கத்தக்கது. இவை வெறும் கற்பனையே என்று கூறுவதற்கு வாய்ப்பில்லை

## இறைவனின் திருவுருவச் சிறப்பை பாடுதல்

இறைவனின் நிறத்திற்கு பொன்மலையையும், அவரின் திருநீறு அணிந்த மேனிக்கு வெள்ளி மலையையும் உவமைக்கின்றார். திருமாலுக்கு ஒரு பாகத்தையும் உமையம்மைக்கு ஒரு பாகத்தையும் கொடுத்த சிவபெருமானை நோக்கி உன் உரு எதுவெனக் கேட்கிறார். காணும் பொழுதுகள் எல்லாம் இறைவனையே காண்கின்றார் அம்மையார்.

“காலையே போன்று இலங்கும் மேனி கடும்பகலின்

வேளையே போன்று இலங்கும் வெண் நீறு -மாலையின்

தாங்கு உருவே போலும் சடைக் கற்றை மற்று அவர்க்கு

வீங்கு இருளே போலும் மிடறு!” (Kalyanasundaram, 1994)

இறைவன் அணிந்திருக்கக் கூடிய பாம்பு, மதி, மான், புலி, தலையில் சூடியுள்ள கங்கை இவற்றையெல்லாம் ஒருங்கே அடக்கி ஆளக்கூடியவனாக இறைவனை போற்றுகிறார். அவர் கையில் உள்ள கபாலம் கடல்கள் மொத்தத்தையும் இட்டாலும் நிரம்பாத தன்மையுடையது என்கிறார். இறைவன் திருமுடி மேல் திங்கள், கங்கை, பாம்புகள் போன்றவையிருக்கும் காட்சியானது வானத்தைப் போல காட்சி அளிப்பதாக கூறுகிறார். இறைவனுடைய திருவடியில் எப்பொழுதும் இருக்கும் தழும்பு தேவர்கள் மகுடத்துடன் விழுந்து வணங்கும்போது ஏற்பட்டதாக கூறுகிறார். இவருடைய பாடல்களில் இறைவனின் திருவுருவச் சிறப்பினை கூறும் விதத்தில் இயற்கையையும் புராணத்தையும் ஒருங்கே கூறுகிறார். இவ்வுலகத்தில் உள்ள காட்சிகள் எல்லாம் இறைவனாய் தோன்றும்படி காரைக்கால் அம்மையார் தன் பாடல்களின் வழியே பதிவு செய்கிறார்.

## புராணம் தொடர்பான செய்திகள்

காரைக்கால் அம்மையார் பாடல்களில் புராண செய்திகள் பல இடம் பெற்றுள்ளன. திரிபுரம் எரித்தது, கரியுரித்துப் போர்த்தியது, ஆலகால விடம் உண்டது, காலனை உதைத்தது, இராவணனுக்கு அருள் புரிந்தது, பிரம்மாவும் விஷ்ணுவும் அடிமுடி தேடியது, பிட்சாடனர் வடிவம் எடுத்தது, மன்மதனை எரித்தது, அர்ச்சுனருக்கு பாசுபதம் கொடுத்தது, உமையமைக்கும் மாலுக்கும் தன் உடலில் சரிபாதி கொடுத்தது எனப் பல்வேறு செய்திகளை நோக்கும் பொழுது இவர் காலத்திற்கு முன்னமே புராணச் செய்திகள் தமிழ்நாட்டில் பரவி இருந்தது என்பதையும் சைவ சமயம் மக்கள் சமயமாக இருந்தது என்பதையும் அறிய முடிகிறது. சைவம் என்ற சொல்லை இவர் பயன்படுத்தவில்லையே தவிர அச்சமயம் சிவனை முழுமுதற் கடவுளாகவும் சிவனடியார்களை போற்றுதல் சமூகத்தில் இருந்ததையும் அறிய முடிகிறது.

## வீரசைவம் அல்லது கபாலிகம்

அன்றைய காலகட்டத்தில் இந்தியா முழுவதும் சிவ வழிபாடு இருந்ததை ஆய்வாளர்கள் உறுதி செய்கின்றனர். அவற்றிலிருந்து வேறுபட்ட சமயமாக தமிழ்நாட்டில் சைவம் நிறுவனமயமாக்கப்பட்டது. அதற்கு அடிக்கோலிவர்களில் காரைக்கால் அம்மையார் முதன்மையானவர்.

## காரைக்கால் அம்மையார் வாழ்ந்த சமூகம்

சுந்தரர், நம்பியாண்டார் நம்பி, சேக்கிழார் ஆகியோர் மூலம் அம்மையாரின் வாழ்க்கை குறித்து அறிய முடிகின்றது. கணவன் விரும்பிக் கேட்ட மாங்கனியை இல்லை என்று கூறுதல் கற்புடைய பெண்டிற்கு அழகல்ல என்ற எண்ணத்தின் காரணமாக இறைவனிடம் மாங்கனியை பெற்றுத்தன் கணவனுக்கு கொடுக்கிறாள். இத்தகையப் பெண் தன் கணவன் வேறொரு பெண்ணை மணந்து தன்னுடன் இல்லறம் நடத்த மாட்டான் என்று தெரிந்த பின் வேறொரு அவதாரம் எடுக்கிறாள். அவனை விட்டு நீங்குவதோடு மட்டுமல்லாமல் அவனுக்காகத் தாங்கிய உடம்பையும் உதறுகிறார்.

அக்காலகட்டத்தில் எங்கேயும் எதிலும் கண்டிராத கேட்கிறாத ஒரு துணிச்சலான பெண்ணின் நிகழ்வாக இது காணப்படுகிறது. இந்நிகழ்வு நடந்து எத்தனையோ ஆயிரம் ஆண்டுகள் கடந்து விட்டோம். அறிவியல் முறையிலும் எவ்வளவோ மாற்றங்கள் நடந்து விட்டது. ஆனால் இன்று கூட ஒரு பெண் தன் கணவனை மற்றொரு பெண்ணுக்கு தருவது என்பது இயலாத காரியமாய் இருக்கிறது. அறிவிலும் பொருளாதாரத்திலும் சிறந்திருந்தாலும் ஒரே ஆணுக்காக இரு பெண்கள் சண்டை இடுவதை இன்றும் காண்கிறோம். ஆனால் அன்றையச் சூழ்நிலையில் தனி ஒரு பெண்ணாக தன்னை வேண்டாம் என்று நினைத்த கணவனை அப்படியே விட்டுவிட்டு அவனுக்காக தாங்கிய உடம்பையும் உதறித் தள்ளிவிட்டு தன் வாழ்வின் மையமான சிவனை நோக்கி தன் பயணத்தை தொடரும் காரைக்கால் அம்மையார் இன்றைய பெண்களுக்கு எல்லாம் கூட ஒரு முன்னோடியாகத் திகழ்கிறார்.

அம்மையார் விரும்பிப் பேய் வடிவம் பெற்றதாக அவர் தம் பாடல்களைக் கொண்டே அறிய முடிகிறது. பெண்கள் சமய வாழ்வில் முன்னிலைப்படுத்தப்படாத காலகட்டத்தில் தனி ஒரு பெண்ணாக பேயாக அம்மையார் சமூக வரலாற்றில் இடம் பெற்றுள்ளார். இவரது மனவலிமை நோக்கத்தக்கது.

"யானே தவமுடையேன் என் நெஞ்சே நன்நெஞ்சம்

யானை பிறப்பறுப்பான் எண்ணினேன்" (Kalyanasundaram, 1994)

என சொல்லும் போது அவரை மற்றவர்கள் எத்தகைய நிலைக்கு ஆளாக்கி உள்ளனர் என்பதையும் அறிய முடிகிறது.

"இனியோ நாம் உயர்ந்தோம் இறைவன் தாள் சேர்ந்தோம்

இனியோ ரிடரெல்லோம் நெஞ்சே - இனியோர்" (Kalyanasundaram, 1994)

என தன் நெஞ்சுக்கு உரைப்பதாக இந்த சமூகத்திற்கு தான் பட்ட அவலத்தை எடுத்துரைக்கிறார். அவரைத் தாழ்ந்தவர் தகாதவர் என்றெல்லாம் இச்சமூகம் இழிவுபடுத்தி உள்ளது இனியும் நாம் உயர்ந்தோம் இறைவனை தாள் சேர்ந்தோம் என்று தன் நெஞ்சிற்குக் கூறிக் கொள்வதாக தான் பட்ட துயரத்தை மற்றவர்களுக்கு விளக்குகிறார்.

## காரைக்கால் அம்மையார் கற்பித்த ஒழுக்கங்கள்

கால வெள்ளத்தில் அடித்து செல்லாமல் பல்லாயிரம் ஆண்டுகள் கடந்து நிற்கும் காரைக்கால் அம்மையாரின் படைப்புகள் சமூகத்திற்கு பக்தியை மட்டுமல்ல நல்ல அறங்களையும் கற்றுத் தருகின்றன. சிவபெருமானை தம் உள்ளத்திலே கொண்டு எந்நேரமும் அவனை நினைத்துக் கொண்டிருக்கும் காரைக்காலம்மையார் மக்கள் பின்பற்றக்கூடிய ஒழுக்கங்களையும் தன் பாடல்களின் வழியே வெளிப்படுத்துகிறார். ஒவ்வொரு மனிதனும் பக்தி நெறியில் நிற்கவில்லை எனினும் சில அறங்களை கடைப்பிடித்தல் என்பது அவசியமாகும். அந்த வகையில் கொல்லாமை, களவு செய்யாமை, கள் உண்ணாமை, வெஃகாமை, பொய் சொல்லாமை என்ற ஐந்து ஒழுக்கங்களும் மனிதன் கடைபிடிக்க வேண்டிய தலையாய ஒழுக்கம் என காரைக்காலம்மையார் உணர்த்துகிறார்.

"தலையாய ஐந்திணையும் சாதித்துத் தாழ்ந்து

தலையாயின உணர்ந்தோர் காண்பர்"

என்ற பாடலில் கடைபிடிக்க வேண்டிய ஒழுக்கங்களைக் கூறுகிறார். அதே போல் ஒவ்வொரு மனிதனும் நல்ல எண்ணங்களை கொண்டிருப்பான், எனில் அவனுக்கு நல்ல செயல்களே நிகழும் என்பதை,

"தமக்கென்றும் இன்பணி செய்திருப்பேமுக்கு தாமொருநாள்

எமக்கொன்றும் சொன்னால் அருளாய் கொலோ"

என்ற பாடலில் தனக்கு நன்மை நடக்க வேண்டும் என்பதைப் போல பிறரின் நலனையும் மனதில் கொள்ள வேண்டும் என பிறர் நலம் குறித்தும் கூறுகிறார். இவரின் இத்தகைய கருத்துக்கள் பக்தியை தாண்டி ஒரு தனி மனிதன் கடைப்பிடிக்க வேண்டிய தலையாய நற்பண்பாக இருக்கிறது. அவன் தனிப்பட்ட வாழ்வில் ஐந்து ஒழுக்கங்களையும் கடைப்பிடித்து பிறர் நலனையும் கருத்தில் கொண்டு தன் வாழ்நாள்தோறும் செயல்படுவானெனில் இந்த உலகமானது பகை, பொறாமை, பேராசை, போன்ற இழிவு குணங்கள் அற்று சிறந்து தலைத்தோங்கும் என்பது அவருடைய கொள்கையாக உள்ளது.

## ஐந்து மார்க்கமும் காரைக்கால் அம்மையாரும்

சிவனை வழிபட்டு போற்றக்கூடிய முறைகளில் நான்கு வகையான மார்க்கங்களை கூறுவர். அதாவது சிவனை தந்தையாகவும் தன்னை பிள்ளையாகவும் நினைத்துக் கொண்டு வழிபடும் ஞானசம்பந்தரின் மார்க்கம் சத்புத்திர மார்க்கம் ஆகும். சிவனை முழுமுதற் கடவுளாகவும் தன்னை அடிமையாகவும் நினைத்துக் கொண்டு அப்பர் வழிபடும் முறை தாசமார்க்கம் ஆகும். சிவனையும் தன்னையும் சக தோழர்களாக நினைத்து வழிபடும் மார்க்கம் சகமார்க்கம் ஆகும். சிவனே ஞானத்தின் ஊற்றாய் நினைத்து வழிபடும் மார்க்கம் மாணிக்கவாசகரின் சன்மார்க்கமாகும். ஆனால் காரைக்காலம்மையார் சிவபெருமான் மீது உரிமை எடுத்துக் கொள்ளும் தாய்மை மார்க்கத்தையும் பின்பற்றியுள்ளார் (Santha, 1997).

"நீயுலக மெல்லாம் இரப்பினும் நின்னுடைய

தீய அரவொழியச் செல்கண்டாய் -தூய

மடவரலார் வந்து பலியிடார் அஞ்சி

விடஅரவம் மேலாட மிக்கு." (Kalyanasundaram, 1994)

என்ற பாடல் சிவபெருமானின் திருவுருவச் சிறப்பை மட்டுமல்லாமல் அவர் மேல் அக்கறைக் கொள்ளும் தாயாகக் காட்சித் தருகிறார். காரைக்காலம்மையார் நவிலும்,

"முடிமேற் கொடுமதியான் முக்கணான் நல்ல

அடிமேற் கொடுமதியோங் கூற்றைப் - படிமேற்

குனியவல மாம் அடிமை கொண்டாடப் பெற்றோம்

இனி அவலம் உண்டோ எமக்கு" (Kalyanasundaram, 1994)

என்றப் பாடல் சிவனையே முழுமுதல் கடவுளாகக் கொண்டு அவனை அடிபடைந்த அடியேன் எனக்கு இனி அவலம் எதும் உண்டோ? என்பது தாசமாக்கத்தினை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது. இதேபோல்,

"அறிவானுந் தானே அறிவிப்பான் தானே

அறிவாய் அறிகின்றான் தானே - அறிகின்ற

மெய்ப்பொருளுந் தானே விரிசுடர்பார் ஆகாசம்

அப்பொருளுந் தானே அவன்." (Kalyanasundaram, 1994)

என்ற பாடல் இறைவனை அறிவின் ஊற்றாக கருதுகின்ற சன்மார்க்க நெறியினை வெளிப்படுத்துவதாக அமைகின்றது.

"மிடற்றில் விடம் உடையீர்! உம்மிடற்றை நக்கி

மிடற்றில் விடம் கொண்ட வாறோ? - மிடற்றகத்து

மைத்துஆம் இருள்போலும் வண்ணம் கரிதாலோ?

பைத்துஆடும் நும்மார்பில் பாம்பு" (Kalyanasundaram, 1994)

என்ற பாடலில் இறைவனை தன்னது சக தோழியாக கருதி இறைவன் திருவுருவ சிறப்பை வர்ணிக்கிறார். உமது கண்டத்தில் உள்ள விடத்தை நக்கி நக்கி தான் பாம்பிற்கு கொடிய நஞ்சு தன்மையானது கிடைத்ததோ என்று இறைவனின் திருவுருவச் சிறப்பினை நக்கல் தன்மையோடு கூறுவதில் ஒரு தோழியாக காரைக்கால் அம்மையார் காட்சித் தருகிறார் (Kalaimani Siva, 2001).

"பிறந்து மொழிபயின்ற பின்னெல்லாங் காதல்

சிறந்துநின் சேவடியே சேர்ந்தேன் - நிறந்திகழும்

மைஞ்ஞான்ற கண்டத்து வானோர் பெருமானே

எஞ்ஞான்று தீர்ப்ப திடர்." (Kalyanasundaram, 1994)

என்ற பாடலில் காரைக்கால் அம்மையார் ஒரு குழந்தையாகவே மாறி சிவபெருமானை தந்தையாக நினைத்து சிறுவயது முதலில் உன்மேல் காதல் கொண்டு வளர்ந்த எனக்கு எப்பொழுது இடம் தீர்ப்பாய்? என கேட்கக் கூடியது சத்புத்திர மார்க்கத்தை நினைவுபடுத்துகிறது. பிற்கால சைவ நெறிகளுக்கு எல்லாம் காரைக்கால் அம்மையாரின் சிந்தனைகள் அடி நாதமாக அமைந்ததற்கு இப்பாடல்கள் அனைத்தும் சான்றாகின்றது. ஆனால் காரைக்காலம்மையார் சிவபெருமான் மீது உரிமை கொண்ட அளவிற்கு பிற அடியார்கள் பக்குபவப்படவில்லை போலும். அதனால் தான் நான்கு மார்க்கத்தைப் பின்பற்றியவர்கள் தாய்மை மார்க்கத்தை பின்பற்றாமல் விட்டுவிட்டனர். அத்தகைய பக்குவம் காரைக்காலம்மையார் கொண்டதால் தான் சிவபெருமானே 'அம்மை' என்று அழைத்தார். அவரோடு இணைந்து உலகமே அம்மை என்று அம்மையாரை அழைத்துக் கொண்டிருக்கிறது.

## முடிவுரை

அறுபத்து மூன்று நாயன்மார்களில் தனித்துவம் கொண்டவர் காரைக்கால் அம்மையார். பிற அடியார்கள் எல்லாம் மனிதராக இருக்க காரைக்கால் அம்மையார் மட்டும் பேயாக விளங்கியவர். பன்னிருத் திருமுறைகளின் தொடக்கம் இவரிலிருந்து தொடங்குகிறது என இவரது படைப்புகளின் வழியே அறியலாம். ஆண்டாளுக்கு முன்னமே பக்தி இலக்கியத்திலும் இயக்கத்திலும் சிறந்த பெண்மணி காரைக்கால் அம்மையார் என்பதும் புலனாகிறது. சிவபெருமானைப் புதிய கோணத்தில் தரிசித்தவரும் இவரே. சுடுகாட்டில் சிவபெருமானை பாடியவரும் இவரே. சிவபெருமானின் ஒவ்வொரு தலங்களுக்கும் சென்று தல வரலாறு உருவாவதற்கு அடிக்கோலியவரும் இவரே. ஒன்பதாம் நூற்றாண்டில் பக்தி இலக்கியம் தலைத்தோங்க ஐந்தாம் நூற்றாண்டில் விதைத் தூவியவரும் காரைக்கால் அம்மையாரே என்பதை அறிய முடிகிறது. இல்லறத்தில் இருந்த அம்மையாரை சிவபெருமான் ஆட்கொண்ட பின் அம்மையார் சிவபெருமானை பற்றி இசையாலும் பண்களாலும் உவமையாலும் தன் கற்பனையாலும் போற்றி இவ்வுலகத்திற்கு தன்னையையும் சிவபெருமானையும் ஒருங்கே வெளிக்காட்டினார்.

## References

Kalaimani Siva, R. (2001) Karaikal Ammaiyar Valvum Vakkum, Karanesan Achagam, puducherry, India

Kalyanasundaram, T.V. (1994) Karaikal Ammaiyar Thirumurai, Pari Nilayam, Chennai, India

Santha, S.M. (1997) Kannadathil Karaikal Ammaiyar Varalaru, International Institute of Tamil Studies, Chennai, India

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License